# அம்பாறையில் 7 அதிரடிப்படையினர் பலி!

## அதிகாரி மட்டும் தப்பினார்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா விஷேட அதிரடிப்படையினருக்கும் இடையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் ஏழு விஷேட அதிரடிப் படையினர் இறந்ததாகவும், ஓர் அதிகாரி படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம்பற்றி சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிடுகையில்;

அறுகம்குடாவிற்கும், பாணமைக்கும் இடையில் சென்றுகொண்டிருந்த விஷேட அதிரடிப் படையினர் விடுதலைப் புலிகளால் வழி மடக்கித்தாக்கப்பட்டபோது படையினர் உயிரிழந்ததாகத் தெரிவித்தது.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் நடத்தப்பட்ட மிகமோசமான தாக்குதல் இதுவெனக் கருத்துவெளியிட்ட பாதுகாப்பு அதிகாரி வாகனம் நோக்கிக் கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதனால் வாகனம் முற்றாகச் சேதமடைந்ததாகவும் தெரிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 மார்கழி (04 - 12 - 1990) செவ்வாய்க்கிழமை ஓசை 279

## காசோலை எழுதும் தாளின் பெறுமதி 1 ருபாவாக உயர்வு

(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் அரச வங்கிகளின் காசோலை எழுதும் தாள் ஒன்றின் பெறுமதி ஒரு ரூபாவாக உயர்த்தப்பட உள்ளது. அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின்படி இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. தற்போது இருபத்தைந்து காசோலை எழுதும் தாள்கள் கொண்ட புத்தகம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினையில்

# அவுஸ்திரேலியாவின் தலையீடு

# இந்திய அரசுக்கு சீற்றம்!

(டில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினையில் அவுஸ்திரேலியாவின் தலையீடு முன்னைய இந்திய மத்திய அரசுக்கு ஏற்படுத்திய ஆத்திரமே இந்திய வெளியுறவு அமைச்சரின் சிறிலங்கா விஜயத்தை முதலில் ரத்துச்செய்தது என இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அவுஸ்திரேலியப் பிரதமர் பொப் ஹூவாக்குக்கும், ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கும் இடையில் இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாகப் பரிமாறிக்கொள்ளப்பட்ட கடிதங்களின் உள்ளடக்கத்தைக் கொழும்பு, இந்திய வெளியுறவு அமைச்சுக்குத் தெரிவிக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த முன்னாள் வி. பி.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அதிகூடிய எண் விவேகானந்தா மாணவனுக்கு

(கொழும்பு)

அகில இலங்கை ரீதியில் 1990ஆம் வருடம் ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சிறிலங்கா இராணுவத் தளபதி

## ஹமில்டன் வணசிங்கா பாகிஸ். இரகசிய விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா பாகிஸ்தானுக்கு இரகசிய பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்,

கடந்த வெள்ளிக்கிழமை இவர் கொழும்பில் இருந்து பாகிஸ்தானுக்கு சென்றதாகவும் அங்கு ஒருவார காலம் தங்கியிருந்து பாகிஸ்தானிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகர் - கருணாநிதி டில்லியில் சந்திப்பு

(டில்லி)

டில்லி சென்ற தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி இந்தியப் பிரதமர் சந்திரசேகரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச் சந்திப்பின்போது தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்கள், இலங்கைத் தமிழர் விவகாரங்கள் தொடர்பாகப் பேசப்பட்டன;

இச் சந்திப்பின் பின் பத்திரிகையாளரைச் சந்தித்த முதல்வர் கருணாநிதி தமிழகத்தில் விடுதலைப் புலிகளின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாண் உற்பத்தி இடைநிறுத்தம்

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் பாண் உற்பத்தியை தற்காலிகமாக நிறுத்துவதென பேக்கரி உரிமையாளர் சங்கம் முடிவெடுத்துள்ளது.

மாவின் விலையில் ஏற்பட்ட திடீர் ஏற்றமே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (85)

## ஓமந்தையில் வீர வயோதிபரின் இறுதிச் சடங்குகள் நடந்தன

(வவுனியா)

மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதலில் தப்பிய சிப்பாயுடன் வீரத்துடன் போராடிய வீர வயோதிபர் அருணாசலத்தின் இறுதிச் சடங்குகள் வவுனியாவில் உள்ள அவரது சொந்தக் கிராமமான ஓமந்தையில் இடம்பெற்றன. பெருந்தொகையான பொதுமக்களும் போராளிகளும் இவரது இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு அவருக்கு தமது இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

இந்த இறுதிச் சடங்குகளில் போராளியான இவரது மக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் இரு நிலைகளில்

# புலிகள் - இராணுவம் மோதல்; இழப்புடன் படை முகாம் திரும்பியது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சேமமடு என்ற இடத்தில் நிலைகொண்டிருந்த இராணுவ அணி ஒன்றை விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தியதில் படையினருக்கு பலத்த இழப்பு ஏற்பட்டது.

நேற்று முன்தினம் மேற்படி இராணுவ அணி மீது விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்துத் தாக்குதலைத் தொடுத்த சமயம் இருபகுதியினருக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. மாலை நான்கு மணி முதல் ஆறுமணிவரை நீடித்த இந்த மோதலில் படையினர் தரப்பில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து படையினர் பின்வாங்கிமுகாம் திரும்பினர்.

இதேபோல கடந்த மாதம் இருபத்தொன்பதாம் திகதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணத்தில்

## வெளிவாரிகள் பரீட்சை இம்முறை நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வெளிவாரிக் கலைப்பட்டதாரிகளுக்கான பரீட்சைகள் இத்தமுறை யாழ். மாவட்டத்தில் நடைபெறமாட்டாது. இந்தப் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்திருந்த அனைத்துப் பரீட்சார்த்திகளும் கொழும்பு அல்லது பேராதனை ஆகிய இரண்டு பரீட்சை நிலையங்களில் தமது விருப்பத்துக்கு ஏற்ப ஒன்றைத் தெரிவுசெய்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவபீடத்திற்கு தெரிவாகும் மாணவர்தொகையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மருத்துவபீட மாணவர்களின் தொகை 575இல் இருந்து 800 ஆக அதிகரிக்கப்பட உள்ளது. இவ்வாறு கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டில் முப்பத்துநாலாயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தகுதி உடையவர்களாக இருந்தும் 19 வீதமான மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டதென்றும் இந்த நிலைமையை நீக்க பல்கலைக்கழ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன மீனவர் பற்றி செஞ்சிலுவையிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

கடலில் மீன்பிடிக்கச்சென்ற மூவர் மூன்று நாட்களாகத் திரும்பி வராததினால் அவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுத்தரும்படி செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை மீன்பிடிப்பதற்காக குருநகர்ப் பகுதியிலிருந்து பாலைதீவை நோக்கிச் சென்ற றோகன் என்பவருக்குச் சொந்தமான படகு இன்றுவரை திரும்பி வரவில்லை எனவும் இதில் கனகு, இன்பம், இராசு ஆகிய மூவரும் சென்றனர் எனவும் இவர்கள் படகுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 256 A பருத்தித்துறை வீதி நல்லூர். ''அரஸ்ஜவுளியகம்'' 146 நவீன சந்தை யாழ்ப்பாணம். (R/ 888)

### ஞானம்ஸ் ஸ்ருடியோ

காலை 9.00 மணி தொடக்கம் 1 00 மணி வரையும், கலர் பிலிம் றோல்கள் கழுவுதல், படங்கள்செய்தல், கறுப்பு வெள்ளை படங்கள் பிடித்தல் படங்களை பெரிதாக்குதல், புளொக் ஆகிய சேவைகளை தற்பொழுது வழங்குகின்றது என்பதை அறியத் தருகின்றோம். 301 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(B/1652)

### காணவில்லை

பள்ளிக்குடா ஒருகரையிலிருந்து நீல நிறமுடைய 'புவனேஸ்வரி அம்பாள்' என்னும் மரவள்ளம் அடைந்து சென்றுவிட்டது. இவ்வள்ளத்தின் தகவல் அறிந்தவர்கள் கீழ் உள்ள முகவரிக்கு அறியத்தரவும், தகுந்தசன்மானம் வழங்கப்படும். சு. தெய்வேந்திரம் ஆனைக்கோட்டை சாவல்கட்டு. (R/ 891)

### தவறி விட்டது

பெரியகுளம் கண்டாவளையைச் சேர்ந்த சிவஞானம் சிவகரன் ஆகிய எனது அடையாள அட்டை இல: 600963627V கிளிநொச்சி சந்தையில் கடந்த பல மாதங்களுக்கு முன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சந்திரபவான் ஹோட்டல், பஸ நிலையம், கிளிநொச்சி. (B-1664)

---

தம்பிஜயா ஜெயபாலன் என்பவருடைய அடையாள அட்டையு்இல (622282895V) ஒரு X-RAY படமும் பூந்தோட்டத்திற்கும், ஓமந்தைக்கும் இடையில் 1-11-90 வியாழக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். சந்திரபவன் ஹோட்டல், பஸ் நிலையம், கிளிநொச்சி. (B-1665)

---

ஜெயந்தி அருணாசலம் ஆகிய எனது பரீட்சை பெறுபேற்று அட்டவணை புத்தூரிற்கும் புன்னாலைக்கட்டுவனுக்கு மிடையே தவறிவிட்டது எடுத்தவர் தயவுசெய்து அதில் இருக்கும் நவற்கிரி புத்தூர் என்னும் விலாசத்திற்கு ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(R/8951)

### பதவிகள் வெற்றிடம்

அமெரிக்கன் இலங்கை மிசன் அச்சகத்திற்கு ஆங்கில / தமிழ் அச்சுக்கோர்ப்பாளர்கள் (Compositors) மெசின் மைண்டர் (Machine minders) தேவை. அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும் முகாமையாளர் (அச்சகம்) தென்னிந்தியத் திருச்சபை வட்டுக்கோட்டை. (R/896)

## ஒயில் திருட்டில் தந்தையும் மகனும்

(தெல்லிப்பளை)

கருகம்பானைப் பகுதியில் இருந்த மின்மாற்றி ஒன்றில் ஒயில் திருட முற்பட்ட தந்தையும் மகனும் அவ்வூர் மக்களால் பிடிக்கப்பட்டு விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ச)

---

சுயவிருப்பத்தின்பேரில் இளைப்பாறல்

# யாழ். கல்விக் கோட்டத்தில் 100 பேருக்குமேல் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியர்களுக்கான சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் பெறும் அரசின் திட்டத்தின்கீழ் யாழ். கல்விக்கோட்டத்தில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இதுவரை ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் ஏனைய கல்விக்கோட்டங்களிலும் கணிசமான தொகை ஆசிரியர்கள் ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்துள்ளனர்.

வேலணை கல்விக்கோட்டத்தில் பதினைந்து பேரும் பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தில் ஐம்பது பேரும் மேற்படி ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்.

ஆனால் அரசின் மேற்படி ஓய்வூதிய திட்டத்தின்கீழ் ஆசிரியர் சேவையும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றதா என்பதுபற்றிய திட்டவட்டமான சுற்றுநிருபம் எதுவும் தமக்கு இதுவரை வந்துசேரவில்லைஎன்று கோட்டக்கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

குவைத் ஈராக்கில் இருந்து

# நாடு திரும்பியோர் பட்டியல் வை.எம்.சி.ஏ.தயாரிக்கின்றது

(யாழ்ப்பாணம்)

சில முக்கிய தேவைகளின் பொருட்டு ஈராக், குவைத் ஆகிய நாடுகளில் இருந்து திரும்பியவர்களின் பெயர் விபரங்களை வை.எம்.சி.ஏ. திரட்டுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக யாழ்.மாவட்டத்திலோ அல்லது வெளிமாவட்டங்களிலோ உள்ளஒவ்வொரு அலுவலகங்களுடனும் தொடர்பு கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

இந்நிலைமைபற்றியாழ் வை.எம்.சி.ஏ. அலுவலக அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில் இந்த விபரங்களை உடனடியாக திரட்டி தமக்கு அனுப்பும்படி எமது தலைமை அலுவலகத்திலிருந்து கேட்கப்பட்டுள்ளது ஆனால் இந்த விபரத்தை கொண்டு நஷ்டஈடு வழங்குவதற்கோ அல்லது இவ்விரு நாடுகளிலும் இருந்து திரும்பியவர்களுக்கு மீள வேறு ஒரு நாட்டில் வேலை பெற்றுக் கொடுப்பதற்காகவோ என்பது பற்றி எமக்கு எதுவும் தெரிவிக்கப் படவில்லை என்றும்கூறினார். (லோ)

## 5 தமிழர் பதவி உயர்வு

(பருத்தித்துறை)

1990 ஆகஸ்டில் இலங்கை நிர்வாகசேவை 1ஆம் வகுப்புக்குப் பதவி உயர்த்தப்பட்டவர்களில் கீழ்க்காணும் ஐந்து தமிழர்களும் அடங்குவார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவாளர்களான எஸ். ரீ. மார்க்கண்டு, கே. மாணிக்கவாசகர், எஸ் சோமசுந்தரம் கே. பரமேஸ்வரன், ஏ. ஜெயரட்ணம் ஆகியோராவர். (25)

## சைக்கிள் பாதுகாப்பு இடம்மாற்றம்

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த ஒருமாத காலமாக உள்ளேயும்.வெளியேயுமாக அலைந்து கொண்டிருந்த சைக்கிள் பாதுகாப்பிடம் புதியதொரு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

போதனா வைத்தியசாலையின் முன்பாக ஒரு ஒழுங்கையில் உள்ள காணிஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு சைக்கிள்பாதுகாப்புஇடமாக மாற்றப்பட்டுள்ளது. (லோ)

## அறிவித்தல்

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டியது கட்டாயமாகியுள்ளது. ஏனெனில் தகுந்த மருந்து வகைகளும், போதிய வைத்திய வசதிகளுமற்ற சூழ்நிலையில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து அவற்றால் கடிக்கப்பட்ட பல பொது மக்கள் அநியாய அவலச்சாவுக்கு இலக்காக நேர்ந்துள்ளது. எனவே அடையாளமற்ற நிலையில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்கள் 05-12-90 முதல் பிடிக்கப்படும். அவற்றை பிடித்துக் கொடுப்போருக்கு ரூபா5 சன்மானம் வழங்கப்படும்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி
(மாவட்டச் செயலகம்)

---


வகுப்புகள் மீண்டும் 7-12-90 முதல் ஆரம்பமாகின்றன

**கலாலயா**

யாழ்நகர். (B/ 1654)

---

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்

**A/L 90 DAY CLASSES**

மீண்டும் ஆரம்பம் 5-12-1990 காலை 8 மணி

**A/L 91, 92**

சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

By: BRITTO

(B-1669) ஆரம்பம் 8-12-90 காலை 8 மணி

---

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்**

மீண்டும் பழைய இடத்தில்

எமது ஸ்தாபனம் மீண்டும் இல. 77 பெரியகடைவீதி, யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

(B/1663)

---

**போட்டோஸ்ரற்**

**"ஸ்கைலைன்ஸ்"**

281 B, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

தரமான போட்டஸ்ரற் - றோனியோ வேலைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.
காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை

**'SKYLINES'**
281 B, Clock Tower Road,
Jaffna.

(ஏஜென்சி தபால் கந்தோர் அருகாமை)

(B/1661)


---

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

**நூற்றாண்டு நிறைவு நினைவுச் சொற்பொழிவு**

நேரம்: மு. ப. 10-00 மணி
காலம்; 7-12-1990 வெள்ளிக்கிழமை
இடம் : யாழ். இந்து குமாரசாமி மண்டபம்

'நாவலர் மரபில் இந்துக் கல்லூரி'

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர், இந்துநாகரீகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

தலைவர்

திரு. க. சி. குகதாசன் M Sc
(அதிபர், யா. இ. க.
தலைவர், யா. இ. க. நூற்றாண்டு விழாச் சபை)

அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாச்சபை.
(B-1668)

---

**2 ஆவது ஆண்டு நினைவஞ்சலி**

அன்னைக்கு மைந்தனாக

22 – 05 – 1914



தமிழ் அன்னையின் தியாக மகனாக

04 – 12 – 1988

**தியாகி நா. கருணானந்தசிவம்**

அவர்கள்

கோட்டை யழிந்தது மாங்குளம் வீழ்ந்தது
கொடியவர் பாசறை குப்பையில் ஆழ்ந்தது
வேட்டை தொடர்ந்தது விரிகின்ற திசைகளில்
விடுதலைப் புலிக்கொடி விண்ணோடு பேசுது
நாட்டை நினைத்தனை விடுதலைக் கனவினில்
நாளும் இருத்தனை வீணரால் உடலெனும்
கூட்டைத் துறந்தனை மலர்கின்ற ஈழத்தை
காணக் கனிந்துவா காற்றோடு இழைந்துவா.

குடும்பத்தினர்
காங்கேசன்துறை. நண்பர்கள்
(R. 887)

### சிந்தனைக்கு

*அநீதி, பொய்மை, வஞ்சகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, நிலையான அதிகாரத்தை நிறுவ முடியாது.*

— டெமாஸ்தனிஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2203
த.பெ.எண் 05

# திருமலையில் ஒரு தென்னாபிரிக்கா

திருமலை மாவட்டத்தை முழுமையாக ஆக்கிரமிக்கும் இறுதிக்கட்ட நடவடிக்கைகளைச் சிறிலங்கா பௌத்த சிங்கள பேரினவாதம் தொடங்கியுள்ளது. இலங்கையில் தமிழர் தேசிய இனப்பிரச்சினையைக் கூர்மையடையச் செய்த காரணியான சிங்களக் குடியேற்றங்களை இன்றைய நெருக்கடியின் மத்தியிலும் நிறைவேற்றுவது என சிங்கள பேரினவாதம் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றது.

பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக பல்வேறு நிகழ்வுகள் கடந்தவாரத்தில் இடம்பெற்றுள்ளன. சிறிலங்கா இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் திருமலை மாவட்டத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழர்கள் கடமைக்குச் சமுகம் கொடுக்கவில்லை என காரணம் காட்டி வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் இடங்களுக்கு சிங்களவரை நியமிக்க வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனிவிரட்னா நடவடிக்கை எடுத்துள்ளார்.

அடுத்ததாக திருமலை மாவட்டத்தில் தமிழரில் அகதிகளாக வெளியேறியோரைத் தவிர சிலர் வீடுகளில் வாழ்ந்த ஒரே ஒரு கிராமமான சாம்பல் தீவில் இருந்தும் எஞ்சியிருந்த தமிழரையும் இராணுவம் சுற்றிவளைத்து தடுப்பு முகாம்களுக்கு அள்ளிச் சென்றுவிட்டது. அதாவது திருமலை மாவட்டத்தில் தமிழர்கள் இன்று தடுப்பு முகாம்களில் பணயக்கைதிகளாகமட்டுமே வாழ்கின்றார்கள்.

இந்த நிலை இன்று உலகில் நிற வெறிக்குப் பெயர் பெற்ற தென்னாபிரிக்காவிலும், இன வெறிக்குப் பெயர் பெற்ற இஸ்ரேலிலும் நடைபெறுவதை ஒத்தவையே. தென்னாபிரிக்காவில், வளம்மிக்க நிலங்களும் செல்வம் கொழிக்கும் சுரங்கங்களையும் வந்தேறு குடிகளான வெள்ளையர்கள் ஆக்கிரமித்துக்கொண்டு பூர்வீக குடிகளை தரிசு நிலங்களிலும், பாலைநிலங்களிலும் தடுப்பு வலயங்களிலும் வாழ வைத்துள்ளனர். தென்னாபிரிக்காவின் சனத்தொகையில் இருபது வீதமும் இல்லாத வெள்ளையர்களிடம் தொண்ணூறு வீதத்திற்கும் மேற்பட்ட நிலங்கள் உள்ளன, இந்த வளம் மிக்க நிலங்களில் உழைப்பதற்கும், சுரங்கங்களில் வேலை செய்வதற்கும் கறுப்பின மக்கள் பஸ்களிலும், புகையிரதங்களிலும் கொண்டு வரப்படுகின்றனர். பின்னர் தடுப்புவலயங்களுக்கு கொண்டுசென்று விடப்படுகின்றனர்.

இதேபோன்றே பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேல் தமது கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதியில் பாலஸ்தீனியர்களை தடுப்பு முகாம்களை ஒத்த மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பகுதியிலேயே வாழ வைத்துள்ளனர்.

இன்று திருமலை மாவட்டத்திலும் தமிழருக்கு இந்த நிலையே ஏற்பட்டுள்ளது. தமிழர் பெருமளவில் மாவட்டத்தை விட்டு வெளியேறி விட்டனர்; மிகுதியாக உள்ளோர்களும் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு விட்டனர்.

அத்தோடு இத்தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டோர் தேவைக்கேற்ப கைது செய்யப்பட்டும், சித்திர வதை செய்யப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும்

# உதிக்கும் திசை நோக்கி

சப்பித் தின்னுவன் என்று சொன்ன வார்த்தையிலேயே அந்த மூதாட்டியின் குமுறும் இதயத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. எனவே தொடர்ந்தும் உரையாடினேன். அவற்ற பேர் என்ன ஆச்சி? வேலாயுதம் கனகரட்ணம். என்ன வேலை செய்யிறவர்? அவர் ஒரு ஏலாவாளிமோனை. கூலி வேலைதான் செய்யிறவர். அவருக்கு எத்தினை வயசு? வயசு அவ்வளவா இல்லை மோனை. ஒரு முப்பத்தைஞ்சு இருக்கும். மகளுக்கு எத்தினை பிள்ளையள்? நாலு. இதொண்டும்தான் பெட்டை. அந்தா ஒண்டு, மற்றது விளையாடப்போட்டுது. இங்க ரெண்டும் நிக்குது. இதுகளோட நான் என்ன செய்ய ஏலும். ஏன் தாய் எங்க போட்டா? அவள்.... வீட்டதான். அங்கதான் பிரச்சினையெண்டு வந்திட்டீங்களே, பிறகேன் அங்கை போறா?; அங்கை கிடக்கிற மாங்காய அத இத பொறுக்கிக் கொண்டு வந்து வித்தா ஏதாலும் வாங்கலாம்தானே மோன, இங்க ஏதாவது உதவி கிடைக்குதே? மண்டூரில் தந்ததுதான் பிறகு ஒண்டும் கிடைக்கேல்ல. அப்ப மருந்துகளுக்கு என்ன செய்யிறீங்கள்? மருந்து ஒண்டும் இல்ல. இதுகள் காட்டில கிடக்கிற பூச்சிகள். (அகதிகளைக் காட்டி) அப்ப வருத்தம் வந்தா? வருத்தம் வந்தா மண்டூர் ஆஸ்பத்திரிக்குப் போறது தான்;

மண்டூர் ஆஸ்பத்திரி எத்தினை மைல்? எனக்கு இந்த மைல் கணக்கெல்லாம் தெரியாது மோனை. நடக்கிறது தான் நடந்து மண்டூர் வந்தா நிக்கவேண்டியது தான். அங்க போனா அவன் டாக்குத்தனுக்கு காசு, ஏன் அது அரசாங்க ஆஸ்பத்திரி தானே? அவன் குடிகார டாக்குத்தனுக்கு காசு குடுத்தாத்தான் மருந்து, ஏ... எங்க... காசு இருக்கா பத்து ரூபா தா... இது தான் இஞ்ச இந்தப் புள்ளக்கி காதுக் குத்து... காசு இல்லை கொண்டு போக வச்சிருக்கிறன் அப்ப நீங்கள் இரும்பி உங்கட இடத்த போக

'அடிக்கடி வருவாங்கள்' என்று சொன்னார் அவர். தம்பலவத்தை கனிஷ்ட வித்தியாலயத்திலுள்ள அகதிகள் முகாமுக்குள் வாகனம் போய் நின்றது.

நிர்வாணமான நிலையில் ஒரு பையன் நின்றான். அகதி முகாம்கள் எல்லாவற்றிலுமே நிர்வாணக்கோலம் சகஜம் தான். வீடுகளில் இருந்து ஓடி வந்தவர்கள் கையில் அகப்பட்டதை தூக்கிக் கொண்டு

## 30

வந்தபோது உடுப்புகளைப் பற்றி அக்கறை எடுக்க முடியாது தான். முகாமைச் சுற்றிப் பார்த்தபடியே வந்தேன். வறுமை நிலையிலும் செந்தளிப்பான முகத்தைக் கொண்டிருந்த குடும்பப்பெண் ஒருவரைக் கண்டேன். அரிவாளில் மரக்கறி வெட்டிக் கொண்டிருந்தார். அவரோடு உரையாடத் தொடங்கினேன். அம்மா உங்கடபேர் என்ன? ராஜேஸ்வரி. உங்கட அவற்ற பேர்? தெய்வநாயகம். உங்கட

# உன்னத பயணம்....

ஊர் எது? சென்றல்காம்ப் இங்க வந்து எவ்வளவு காலம்? குழப்படி துடங்கினோன்னை வெட்டக்கிறங்கினதுதான். உடனே இஞ்சை வந்திட்டீங்களோ? இல்ல முதல்ல 14 பள்ளியிலே இருந்து, மறுகா அன்னமலை பள்ளி, 46 பள்ளி துரந்தியன் மடுபள்ளியெண்டு போய் கடசியா இங்க வந்திருக்கிறம். இப்ப திரும்பி உங்கட வீட்டபோகேலாதோ? போகேலாது. எங்களுக்கு ரெண்டு வீடு, ஒருகடை இருந்தது. எல்லாத்தையும் பத்தவைச்சுப் போட்டாங்கள். ஆர் பத்தவைச்சது? முசிலிம் ஆக்களும், ஊர்காவல்படையும். இனி வீட்டை போகேலாது ஏதாவதொரு முடிவு வந்தால் தான் போகலாம். அதுவரைக்

எண்டுதான் யோசிலையாரய்க் கிடக்கு. என்று சொன்னார். ஒருவிதபீதி முகத்தில் படர்வதை அவதானிக்க முடிந்தது.

''சரிவாறம்'' அவரிடம் விடைபெற்றுக் கொண்டேன் போகும் வழியில் பலர் எம்மைமறித்து: ''எங்கட பிள்ளையாரைக் கொண்டு போயிட்டாங்கள் நீங்கள் தான் எப்படியாவது பிள்ளையாரை எடுத்துத் தரவேணும் நாங்கள் கும்புடுறதுக்கு சாமி இல்லாமல் இருக்கிறம் என்றனர். ''ஆர்?'' என்றேன். ''முசிலிம் ஆக்கள்'' என்றனர் '' அவங்களுக்கேன் பிள்ளையார்? என்றேன். அவங்களுக்கு வேற சமயம் எதுவும் இருக்கக் கூடாதெண்டுநிலைப்பாடு. அதுதான் பிள்ளையாரைக் கொண்டு போனவங்கள். ''அது வெண்கலத்தில செய்த பிள்ளையார். என்றனர். நாளாந்தம் முஸ்லிம் ஊர்காவல்படையால் தமது உயிருக்கும் பாதுகாப்புக்கும் ஏற்படும் ஆபத்தைவிட பிள்ளையாருக்கு ஏற்பட்ட ஆபத்துத்தான் அவர்களுக்கு பெரிதாகத் தெரிகிறது மனித உயிர்களை விட மதத்தின் மீதுள்ள நம்பிக்கை பெரிதாகிவிட்டது. அந்தளவுக்கு மதம் மக்களிடையே ஊடுருவியுள்ளது; அதனால் தான் அஷ்ரப் போன்றவர்களாலும் இலகுவில் மதவெறிகளைத் தூண்டக் கூடியதாகஉள்ளது.

எனக்கு 1977ஆம் ஆண்டுக் காலம் நினைவுக்கு வந்தது. அப்போது திருக்கோணமலைக் கோட்டைவாசலில் இருந்த பிள்ளையாரைத் தூக்கி கடலில் போட்ட சிங்களவர் கணபதி தெய்யோ நாண்ட கியா! (பிள்ளையார் குளிக்கப் போய்விட்டார்) என்று சுவரில் எழுதினார்கள். அன்று சிங்களவர்கள். இன்று முஸ்லிம்கள். இந்துக்கள் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் முதலில் பிள்ளையாரை வேண்டித்தான் செய்வார்கள். இவர்களும் ஏதோ ஒரு வழியில் பிள்ளையாருடன் சம்பந்தப்படுகிறார்கள். பௌத்தத்தைத் தவிர வேறு மதம் இலங்கையில் இருக்கக் கூடாது என்ற கருத்தை புத்த பிக்குகளும் சிங்கள அரசியல்வாதிகளும் சாதாரண சிங்கள மக்களுக்கு ஊட்டினர். அதன் விளைவாக இன்னும் இரத்தம் சிந்தப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அதேபோல இன்று அஷ்ரப் குறுகிய அரசியல் லாபத்துக்காக இஸ்லாமிய வெறியை ஊட்டி மேலும். இரத்தம்சிந்தப்படும் நிலையை தொடரச் செய்கிறார். என்

*அன்று திருக்கோணமலையில் பிள்ளையாரை கடலில் தூக்கிப்போட்டு 'கணபதி தெய்யோ நாண்ட கீயா' என்று எழுதினார்கள் சிங்களக் காடையர்கள். இன்று தம்பலவத்தையில் பிள்ளையாரைக் கொண்டு போயிருக்கிறார்கள் முஸ்லிம் காடையர்கள். இந்துக்கள் எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் முதலில் பிள்ளையாரைக் கும்பிடுவது போல் இவர்களும் ஏதோ ஒரு விதத்தில் பிள்ளையாருடன் சம்பந்தப் படுகிறார்கள்.*

சிறிலங்கா இராணுவத்தினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் திருமலை மாவட்டத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழர்கள் கடமைக்குச் சமுகம் கொடுக்கவில்லை என காரணம் காட்டி வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளனர். அவர்களின் இடங்களுக்கு சிங்களவரை நியமிக்க வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனிவிரட்னா நடவடிக்கை எடுத்துள்ளார்.

அடுத்ததாக திருமலை மாவட்டத்தில் தமிழரில் அகதிகளாக வெளியேறியோரைத் தவிர சிலர் வீடுகளில் வாழ்ந்த ஒரே ஒரு கிராமமான சாம்பல் தீவில் இருந்தும் எஞ்சியிருந்த தமிழரையும் இராணுவம் சுற்றிவளைத்து தடுப்பு முகாம்களுக்கு அள்ளிச் சென்றுவிட்டது. அதாவது திருமலை மாவட்டத்தில் தமிழர்கள் இன்று தடுப்பு முகாம்களில் பணயக்கைதிகளாகமட்டுமே வாழ்கின்றார்கள்.

இந்த நிலை இன்று உலகில் நிற வெறிக்குப் பெயர் பெற்ற தென்னாபிரிக்காவிலும், இன வெறிக்குப் பெயர் பெற்ற இஸ்ரேலிலும் நடைபெறுவதை ஒத்தவையே. தென்னாபிரிக்காவில், வளம்மிக்க நிலங்களும் செல்வம் கொழிக்கும் சுரங்கங்களையும் வந்தேறு குடிகளான வெள்ளையர்கள் ஆக்கிரமித்துக்கொண்டு பூர்வீக குடிகளை தரிசு நிலங்களிலும், பாலைநிலங்களிலும் தடுப்பு வலயங்களிலும் வாழ வைத்துள்ளனர். தென்னாபிரிக்காவின் சனத்தொகையில் இருபது வீதமும் இல்லாத வெள்ளையர்களிடம் தொண்ணூறு வீதத்திற்கும் மேற்பட்ட நிலங்கள் உள்ளன, இந்த வளம் மிக்க நிலங்களில் உழைப்பதற்கும், சுரங்கங்களில் வேலை செய்வதற்கும் கறுப்பின மக்கள் பஸ்களிலும், புகையிரதங்களிலும் கொண்டு வரப்படுகின்றனர். பின்னர் தடுப்புவலயங்களுக்கு கொண்டுசென்று விடப்படுகின்றனர்.

இதேபோன்றே பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேல் தமது கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதியில் பாலஸ்தீனியர்களை தடுப்பு முகாம்களை ஒத்த மட்டுப் படுத்தப்பட்ட ஒரு பகுதியிலேயே வாழ வைத்துள்ளனர்.

இன்று திருமலை மாவட்டத்திலும் தமிழருக்கு இந்த நிலையே ஏற்பட்டுள்ளது. தமிழர் பெருமளவில் மாவட்டத்தை விட்டு வெளியேறி விட்டனர்; மிகுதியாக உள்ளோர்களும் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு விட்டனர்.

அத்தோடு இத்தடுப்பு முகாம்களில் அடைக்கப் பட்டோர் தேவைக்கேற்ப கைது செய்யப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் வருகின்றனர்.

சிறிலங்கா பௌத்த பேரினவாதிகளின் நடவடிக்கையால் இன்று திருமலை மாவட்டத்தில் தமிழர் முற்றாக வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு அவர்களின் பொருளாதாரமும் முற்றாக அழிந்துவிட்டது.

இவ்வாறு தமிழர் ஒருபுறத்தில் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கையில் மறுபுறத்தில் அபிவிருத்தி என்ற போர்வையில் ஆக்கிரமிப்பு வேலைகளை சிறிலங்கா அரசாங்கம் முடுக்கிவிட்டுள்ளது. அதன் ஒரு கட்டமாக மீன்பிடி அமைச்சின் தலைமை அலுவலகம் திருமலைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் கரையோர சிங்களக் குடியேற்றங்களை நிறுவது அரசின் திட்டமாகும். விவசாயக் குடியேற்றங்கள் மூலம் திருமலை மாவட்டத்தின் உள் நிலப்பரப்பை ஆக்கிரமித்த சிறிலங்கா அரசாங்கம் இந்த நடவடிக்கை மூலம் கரையோர நிலப்பரப்பை ஆக்கிரமிக்கத் திட்டமிட்டுள்ளது.

ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் அடுத்தகட்டநடவடிக்கையே நேற்று முன்தினம் சிறிலங்கா ஜனாதிபதி அறிவித்த வடக்கு - கிழக்கிற்கான புதிய அபிவிருத்தித் திட்டமாகும். இத்திட்டத்தின் பிரதான அம்சங்களில் ஒன்று திருமலை துறைமுகத்தை மையமாகக் கொண்ட ஐம்பது மைல் பிரதேசத்தை உல்லாசப் பிரயாணத்துறைக்கு விருத்தி செய்தலாகும். இரண்டாவது வடக்கு – கிழக்கிற்கு வீதிகள் அமைத்தலாம். இத்திட்டமும் முழுமையாக சிங்களமயமாக்குவதோடு வடக்கு - கிழக்கில் விரைவான இராணுவ நகர்ச்சிக்கேற்ப வீதிகளை அமைத்தலுமாகும்.

சிறிலங்கா பேரினவாதத்தின் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் ஒருபோதும் இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்கு வழி வகுக்கப்போவதில்லை. ஆக்கிரமிப்பின் மூலம் அமைதியை நிலைநாட்டலாம் என்றால் அது பகற்கனவாகவே இருக்கும். கிழக்கை ஆக்கிரமிக்கும் சிறிலங்கா இராணுவம் ஆயினும் சரி, 'சிங்களகுடியேற்ற வாதிகள்' ஆயினும் சரி, 'சிங்கள அதிகாரிகள்' ஆயினும் சரி 'பௌத்த பிக்குகள்' ஆயினும் சரி. அனைவரும் தமிழ் மக்களைப் பொறுத்து ஆக்கிரமிப்பாளர்களே. இந்த ஆக்கிரமிப்பாளர்களை விரட்ட ஆயுதத்தைத் தவிர வேறுவழி ஏதும் தமிழருக்கு இல்லை.

---

# உன்னத பயணம்....

ஒண்டும் கிடைக்கேல்ல. அப்ப மருந்துகளுக்கு என்ன செய்வீறீங்கள்? மருந்து ஒண்டும் இல்ல. இதுகள் காட்டில கிடக்கிற பூச்சிகள். (அகதிகளைக் காட்டி) அப்ப வருத்தம் வந்தா? வருத்தம் வந்தா மண்டூர் ஆஸ்பத்திரிக்குப் போறது தான்.

மண்டூர் ஆஸ்பத்திரி எத்தினை மைல்? எனக்கு இந்த மைல் கணக்கெல்லாம் தெரியாது மோனை. நடக்கிறது தான் நடந்து மண்டூர் வந்தா நிக்கவேண்டியது தான். அங்க போனா அவன் டாக்குத்தனுக்கு காசு, ஏன் அது அரசாங்க ஆஸ்பத்திரி தானே? அவன் குடிகார டாக்குத்தனுக்கு காசு குடுத்தாத்தான் மருந்து, ஏ... எங்க... காசு இருக்கா பத்து ரூபா தா... இது தான் இஞ்ச இந்தப்

பேர்? தெய்வநாயகம். உங்கட ஊர் எது? சென்றல்காம்ப் இங்க வந்து எவ்வளவு காலம்? குழப்படி துடங்கினோண்ணை வெட்டக்கிறங்கினதுதான். உடனே இஞ்சை வந்திட்டீங்களோ? இல்ல முதல்ல 14 பள்ளியிலே இருந்து, மறுகா அன்னமலை பள்ளி, 46 பள்ளி துரந்தியன் மடுபள்ளியெண்டு போய் கடசியா இஞ்ச வந்திருக்கிறம். இப்ப திரும்பி உங்கட வீட்டபோகேலாதோ? போகேலாது. எங்களுக்கு ரெண்டு வீடு, ஒருகடை இருந்தது. எல்லாத்தையும் பத்த வைச்சுப் போட்டாங்கள். ஆர் பத்தவைச்சது? முசிலிம் ஆக்

> அன்று திருக்கோணமலையில் பிள்ளையாரை கடலில் தூக்கிப்போட்டு 'கணபதி தெய்யோ நாண்ட கீயா' என்று எழுதினார்கள் சிங்களக் காடையர்கள். இன்று தம்பலவத்தையில் பிள்ளையாரைக் கொண்டு போயிருக்கிறார்கள் முஸ்லிம் காடையர்கள். இந்துக்கள் எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் முதலில் பிள்ளையாரைக் கும்பிடுவது போல் இவர்களும் ஏதோ ஒரு விதத்தில் பிள்ளையாருடன் சம்பந்தப் படுகிறார்கள்.

புள்ளக்கி காதுக் குத்து... காசு இல்ல கொண்டு போக வச்சிருக்கிறன் அப்ப நீங்கள் திரும்பி உங்கடஇடத்த போக முடியாதே? எங்க மோனை போற உடுத்த பாவாடையோட ஓடிவந்தது மோனை. ஆக்கினசோறுசாப்பிட இல்ல. வீட்டில உப்புமின்கூடபொறுக்கினவங்கள் ஆர் பொறுக்கினது? சிங்களவன்தான். இப்ப கெதியா எங்களுக்கு வீடு கட்டித்தர வேணும். நான் என்ர வீட்டயெண்டா ஒரு மூலேக்கை கிடப்பன். காட்டுக்குப்போவன். (மலசல கூடத்திற்கு) இங்க பார் என்னெண்டு இருக்கிற. இப்படி நீங்கள் எத்தினை குடும்பம் இருக்கிறீங்கள்? 24 குடும்பம்.

'அப்ப ஆச்சி வாறம்' என்றவாறே விடைபெற்றோம். அங்கிருந்து தம்பலவத்தை என்னும் இடத்திற்குச் சென்றோம். இந்தப் பகுதி தற்போது அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர். எமது பயணத்தில் ஆகக்கூடிய தூரம் சென்ற இடம் என்று குறிப்பிட முடியுமானால் இந்தக் கிராமத்தைத்தான் சொல்ல முடியும். எனவே அந்தப்பகுதிப் பிரதேசப் பொறுப்பாளரிடம் 'இந்தப் பகுதியில் முஸ்லிம் ஆக்களால் பிரச்சினையில்லையே?' என்று கேட்டேன். ஏன் முந்தநாள் கூட ஒரு அறுபது பேரளவில் வந்தவங்கள் - ஆர்? முஸ்லிம் ஆக்களும்சிங்களவனுகளும் தான். நம்மட பையனுகள் போய்த் தான் அடிச்சுக் கலைச்சது.

களும், ஊர்காவல்படையும். இனி வீட்டை போகேலாது ஏதாவதொரு முடிவு வந்தால் தான் போகலாம். அதுவரைக்கும் இங்கின இடந்து சாக வேண்டியதுதான். இங்க ஆரும் வந்து உங்களுக்கு உதவிசெய்தவையே? விதானைமார் ஒருக்கா தந்தவை. இந்தத் தம்பிமார்தான் (புலிகள்) ரெண்டுதரம் வந்து கொஞ்ச சாமான் தந்தவை. சோறாக்கக் கூட பானை இல்லாமத் தான் வந்தனாங்கள், கடைசியா இங்கின இருக்கிற தம்பி தான் பானை ஒண்டு தந்தவர். உங்கட ஊரில் எவ்வளவு குடும்பம் இப்பிடி அகதியாப் போனது? ஒரு... இருநூறு குடும்பம். எங்கட சென்றல்காம்ப், 3ம் வட்டாரம் எல்லாம் எழும்பீட்டுது. ஊர்காவல் படையால் ஆரும் செத்திருக்கினமே? ஓ கனபேர். பேர் தெரியுமே? குமார் என்ட ஆன் மருகா... சாமி... சுரேஷ்... சினப்பெடியன்... வட்ட விதானையற்ற மகள். அதுசரி எங்கை உங்கட அவர்? அவர் கல்முனைக்கு போட்டார். கல்முனைக்கு போறது பயமில்லையே அடிக்கடி முஸ்லிம் ஊர்காவல்படையின்ர குழப்படி எண்டு கேள்விப்படுறம் ஏன் அங்கைபோனவர் அங்கை பிரச்சினை தானே? பிரச்சினைதான் பயந்து பயந்துதான் போறவர். எத்தினை மணிக்கு வருவார்? மாங்காய் கொண்டு போனவர் அதவித்துத்தான் ஏதாவது சாமான் வாங்கிவர வேணும். இப்ப வாறநேரம் தான். இன்னும் காணயில்ல

வியுள்வது: அதனால் தான் அஷ்ரப் போன்றவர்களாலும் இலகுவில் மதவெறிகளைத் தூண்டக் கூடியதாகஉள்ளது.

எனக்கு 1977ஆம் ஆண்டுக் காலம் நினைவுக்கு வந்தது. அப்போது திருக்கோணமலைக் கோட்டைவாசலில் இருந்த பிள்ளையாரைத் தூக்கி கடலில் போட்ட சிங்களவர் கணபதி தெய்யோ நாண்ட கியா! (பிள்ளையார் குளிக்கப் போய்விட்டார்) என்று சுவரில் எழுதினார்கள். அன்று சிங்களவர்கள். இன்று முஸ்லிம்கள். இந்துக்கள் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் முதலில் பிள்ளையாரை வேண்டித்தான் செய்வார்கள். இவர்களும் ஏதோ ஒரு வழியில் பிள்ளையாருடன் சம்பந்தப்படுகிறார்கள். பௌத்தத்தைத் தவிர வேறு மதம் இலங்கையில் இருக்கக் கூடாது என்ற கருத்தை புத்த பிக்குகளும் சிங்கள அரசியல் வாதிகளும் சாதாரண சிங்கள மக்களுக்கு ஊட்டினர். அதன் விளைவாக இன்னும் இரத்தம் சிந்தப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அதேபோல இன்று அஷ்ரப் குறுகிய அரசியல் லாபத்துக்காக இஸ்லாமிய வெறியை ஊட்டி மேலும். இரத்தம்சிந்தப்படும் நிலையை தொடரச் செய்கிறார். என்பதை உணர முடிந்தது. அதனால்தான் காத்தான்குடியில் ஒரு கிறிஸ்தவபாதிரியாரைப் பிடித்து அரிந்த சீமெந்துக் கல்லில் முகத்தைத் தேய்த்துத் துன்புறுத்தினார்கள். இதுவரை இரு கிறிஸ்தவ மதகுருமாரை முஸ்லிம்கள் கொன்றிருக்கிறார்கள். உலகில் மதத்திற்காக மதத்தின்பேரால் நடந்தயுத்தங்கள் தான்கூடுதல். மதச்சண்டையில் செத்தவர் தொகைதான் கூட என்பது திரும்பவும் நினைவுக்கு வந்தது.

அத்துடன் காரக்காச்சி வெட்டையிலும் தம்பலவத்தையிலும் நான்கேள்விப்பட்ட விடயங்கள் ஒரேமாதிரியாக இருந்தன. இரண்டு இடங்களிலும் தமக்கு மரணம் நேரும் என்று தெரிந்து கொண்டும் மரணப் பொறிக்குள் போகத் தயாராகஇருக்கிறார்கள்அந்த மக்கள் இரண்டுஇடங்களிலும் மாங்காயைப் பொறுக்கிவிற்று கிடைக்கும் பணத்தில் பிள்ளைகளுக்குசாப்பாடுகொடுக்க நினைக்கிறார்கள். அங்கே சிங்களவரால் தொல்லை இங்கே முஸ்லிம்களால் தொல்லை எனினும் வறுமையின் கோரம் தான் அந்த மக்களை உயிரைச்சாதாரணமாக நினைக்கவைக்கிறது.

(தொடரும்)

உலக வங்கிகளும் உதவி வழங்கும் நாடுகளும்

# மனித உரிமைகள் மீறப்படுவதை கருத்திற் கொள்ளவேண்டும்

அமெரிக்க செனட்டர் வேண்டுகோள்

(நியூயோர்க்)

சிறிலங்காவுக்குப் புதிதாகப் பொருளாதார உதவி வழங்கும் விஷயத்தில் அங்கு மனித உரிமைகள் மீறப்பட்டு நிலைமை சீர்கெட்டிருப்பதை இனிமேலாவது கருத்திற் கொள்ளுமாறு அமெரிக்க காங்கிரஸ் செனற் முக்கியஸ்தர்களான ஸ்ரீபன் ஜே. சோல்ரெக்ஸ்ஸூம், ஹஸ்ஜெத்றனும் உலக வங்கியையும், சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் அமைப்பையும் எச்சரித்துள்ளனர்.

சிறிலங்காவில் மனிதஉரிமைகள் மீறப்படுவது தொடர்பாக அமெரிக்க காங்கிரஸின் ஆழ்ந்த கவலையை உலக வங்கிக்கும், சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் அமைப்புக்கும் அறியத்தருமாறு அமெரிக்க காங்கிரஸ் ஆசிய – பசுபிக் குழுத்தலைவர் ஸ்ரீபன் ஜே. சொல்ரெக்ஸ்ஸூம், அமெரிக்க காங்கிரஸ் மனிதஉரிமைகள் உபகுழுவின் தலைவர் ஜெத்றனும் புஷ் நிர்வாகத்தைக்கேட்டுள்ளனர்.

சிறிலங்காவில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதையும் வேறு அத்துமீறல்களையும், மற்றநாடுகளும், மனிதநேய ஸ்தாபனங்களும் வழங்கும் உதவிகளானது பாரபட்சமான முறையில் அரசாங்கத்தால் பகிரப்படுவதையும் அமெரிக்க செனற்றர்கள் இருவரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## போருக்கும் சமாதானத்திற்கும் வாய்ப்புக்கள் சமமாகவுள்ளன

—சதாம் உசைன்

(பாக்தாத்)

வளைகுடாவில் போர் அல்லதுசமாதானத்துக்கான வாய்ப்புகள் சரிபாதியாக இருக்கின்றது என ஈராக்கிய ஜனாதிபதி சதாம் உசைன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிரான்சின் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்குப் பேட்டியளித்த அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவுடனான பேச்சு வார்த்தை பற்றிக் குறிப்பிடும்போது ''அமெரிக்கா ஈராக்குடன் நேரடியாகப் பேசமுன்வந்திருப்பதுவரவேற்கத் தக்கது என்றும், இந்தப் பேச்சுவார்த்தை யோசனை எந்த அளவுக்கு உண்மையானது என்பதைப் பொறுத்துத்தான் வளைகுடாவில் போர் மூளுமா அல்லது அமைதி நிலவுமா என்பதைக்கூறமுடியும்'' என்றும் தெரிவித்தார்.

பாலஸ்தீனப்பிரச்சினைஉட்பட வளைகுடாப் பகுதியின் எல்லாப் பிரச்சினைகளும் இந்தப் பேச்சுக்களின்போதுஇடம்பெறவேண்டும் எனவும் வற்புறுத்திக் கூறினார்.

அதேவேளை ஈராக் ஜனாதிபதி சதாம் உசைன் மார்ச் மாதம்வரை ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுக்காது என உறுதியளித்தால் ஈராக்கில் தடுத்துவைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர் படிப்படியாக விடுதலை செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

## ஹெல்மட் ஹோல் மீண்டும் ஜேர்மன் அதிபராகத் தெரிவு

(பேர்லின்)

ஒன்றுபட்ட ஜேர்மனியில் இடம்பெற்ற முதலாவது தேர்தலில் ஹெல்மட் ஹோல் மீண்டும் ஜேர்மன் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தத் தேர்தலில் ஹெல்மட் ஹோல் தலைமையிலான மைய வலதுசாரிக்கூட்டணி 55 சதவீத மக்கள் வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றத்தில் தமது பலத்தை வலுப்படுத்திக் கொண்டுள்ளது.

இந்தத் தேர்தல் வெற்றி மூலம் ஹெல்மட் ஹோல் மேலும் நான்கு ஆண்டுகளுக்குத் தமது பதவியில் தொடர்ந்து இருக்கலாம்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்களுக்கு 35 சதவீத வாக்குகளே கிடைத்தன.

## மக்கள் வங்கிக்கு 25மில்.ரூபா அனுப்பிவைக்க ஒப்புதல்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்கள்வங்கிக்கு இருபத்தைந்து மில்லியன் ரூபா பணம் அனுப்பிவைப்பதற்கு கொழும்பு மக்கள் வங்கி தலைமை அலுவலகம் ஒப்புக் கொண்டிருக்கிறது

எனினும் இப்பணம் கட்டுப் படைகளின் தலைமையகம் வடபகுதிக்கு அனுப்பிவைப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட ஐம்பது மில்லியன் பணத்தை விட மேலதிகமாக இருக்காது எனவும் மக்கள் வங்கிக்கு இப்பணம் கிடைத்ததும் கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கமுடியும் எனவும் பிராந்திய மூகாமையாளர் தெரிவித்தார். (க)

## ஓய்வு பெற்றவர்களுக்கும் கொடுப்பனவு உயர்வு வேண்டும்

(கொழும்பு)

அரசாங்க கடமைகளில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் கொடுப்பனவுஉயர்வு அளிக்கப்பட வேண்டும் என பொது நிர்வாக அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் படி மற்றைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கியதைப் போன்று 2000 ரூபாவிற்குக் குறைந்த சம்பளம் உடையவர்களுக்கு 300 ரூபா அலவன்ஸூம் 2000க்கும் 3000க்கும் இடைப்பட்ட சம்பளம் வாங்குபவர்களுக்கு 200 ரூபா அலவன்ஸூம் வழங்கப்பட வேண்டும் என்றும் பொது நிர்வாக அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

## பணம் பெறச் சென்றவரின் மரணச் செய்தி வானொலியில்

(மல்லாகம்)

சகோதரியின் திருமணத்திற்காக வெளிநாடு செல்ல ஏஜென்சியிடம் கட்டிய பணத்தை மீளப்பெற்று வரச்சென்ற குடும்பஸ்தரின் மரணச் செய்தியை வானொலியில் கேட்ட அவரது குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்தனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு செல்வதற்காக ஏஜென்சி ஒருவரிடம் பணத்தைக் கட்டிய ஒருவர் ஏஜென்சி இதுவரை வெளிநாட்டிற்கு அனுப்பாது ஏமாற்றி வந்ததாலும் தன் சகோதரியின் திருமணத்திற்கு திகதி குறிக்கப்பட்டதால் அச்செலவுகளுக்காகப் பணம் அவசரம் தேவைப்பட்டதாலும் அதனை பெற்றுவரும் நோக்குடன் கடந்த மாதம் 10ஆம் திகதி கொழும்பு சென்றார்.

பின்னர் கடந்த புதன்கிழமை மேற்படி நபர் இறந்து விட்டதாக வானொலிமூலம் மரணச் செய்தி வெள்ளிக்கிழமை ஒலிபரப்பப்பட்டது. இச்செய்தியைக் கேட்ட இவரது குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்தனர். இவருக்கு என்னநடந்ததென்பதோ மரணச் செய்தியைவானொலிக்கு கொடுத்தவர்கள்யார்என்பது பற்றியோ இதுவரை எதுவும் புரியாத புதிராகவே உள்ளது. மேற்படி இறந்தவர் பலாலியைச் சேர்ந்த பொன்னர்-சிவராசா (42) ஆவார். (ச)

## பணம் கட்டத் தவறியோருக்கு காப்புறுதிகூட்டுதாபனம் சலுகை

(யாழ்ப்பாணம்)

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஆயுள் காப்புறுதிசெய்து கொண்டவர்களில் கடந்த சில மாதகாலத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக கட்டுப்பணத்தை கட்டத்தவறியவர்களுக்கு சலுகை வழங்கப்பட்டு தொடர்ந்தும் கட்டுப்பணம் செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

இதற்காக இவர்கள் மருத்துவ சான்றிதழோ அல்லது வேறு சான்றுப்பத்திரங்களோ சமர்ப்பிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் சம்பந்தப்பட்டவர் உயிரோடிருக்கிறார் என்பதற்குரிய ஏதாவது ஒரு சான்று சமர்ப்பித்தால் அவர் தொடர்ந்தும் பணம் செலுத்த அனுமதிக்கப்படுவார் என்றும் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

யாழ். மாநகர சபைக்குள்

## அனுமதியின்றி கட்டடங்கள் அமைப்பதற்குத் தடை

(யாழ்ப்பாணம்)

இனிமேல் மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் இடிந்த கட்டடங்களை திருத்துவதாக இருந்தாலும் அல்லது புதிய கட்டடங்களை அமைப்பதாக இருந்தாலும் யாழ். மாநகர சபையின் அங்கீகாரம் இன்றி அமைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது என மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். நகரில் கடந்த காலங்களில் சிறிலங்கா விமானப்படை விமானங்களால் வீசப்பட்ட குண்டுகள் பெரும் சேதங்களை விளைவித்துள்ளன. இதனால் இடிந்து நாசமாகிவிட்ட கடை கட்டடங்களை சில தனியார் எதேச்சையாக திருத்தி முன்பு இருந்ததைப் போலவே திட்டமிடாத ஒரு நகரை உருவாக்கி வருகின்றனர். இச் செயலையிட்டு மாநகர சபைக்குள் இருக்கும் கட்டட சொந்தக்காரர்களுக்கு விடுத்த அறிவிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். (லோ)

## 500 ரூபா முற்பணம்

(கொழும்பு)

குறிப்பிட்ட சிலதரங்களைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கு 500 ரூபா முற்பணம் அடுத்தஆண்டில் இருந்து வழங்கப்படும் என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த முற்பணங்கள் அனைத்தும் 10 மாதங்களில் 14 வீத வட்டியுடன் அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இளம்பெண் தற்கொலை முயற்சி

(பண்டத்தரிப்பு)

குடும்பத்திலேற்பட்ட தகராறு காரணமாகப் பண்டத்தரிப்பில் இளம் குடும்பப்பெண் ஒருவர் கிருமிநாசினியை அருந்தித் தற்கொலை செய்ய முற்பட்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

அதிகூடிய

வகுப்பு புலமைப் பரிசிற் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளை கொட்டாஞ்சேனை விவேகானந்த மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த தமிழ் மாணவன் பெற்றுள்ளார்.

பி. தாமோதரம்பிள்ளை என்ற மாணவனுக்கு 189 புள்ளிகள் கிடைத்து முதலிடத்தையும் அதே பாடசாலையைச் சேர்ந்த பி. பாலச்சந்திரன் என்ற மாணவனுக்கு 181 புள்ளிகள் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

அம்பாறையில்

தார். மேலும் இச்சம்பவத்தில் ஓர் அதிகாரி மட்டுமே பலத்தகாயத்துடன் உயிர் தப்பியதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை கிழக்கில் அரசு கூறுவது போன்று விடுதலைப் புலிகளின் நடவடிக்கைஓய்ந்து விடவில்லை என இத்தாக்குதல் வெளிப்படுத்துவதாகவுள்ளது என நேற்றிரவு பி. பி. சி தெரிவித்தது.

ஹமில்டன்

இராணுவ தளபதிகளுடனும், பாதுகாப்பு அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவார் என செய்திகள் கூறுகின்றன.

வெளிவாரிகள்

அங்கு சென்று பரீட்சையை எழுதிக்கொள்ளவேண்டும்.

கலைப்பட்டதாரிகளுக்கான இந்த வெளிவாரிப் பரீட்சைகள் இந்தமாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரைக்கும் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பரீட்சை சம்பந்தமாக யாழ். மாவட்டத்தில் உள்ள அந்தப் பரீட்சை விண்ணப்பதாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் யாழ் பல்கலைக்கழக உபவேந்தருக்கு இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (லோ)

அவுஸ்திரேலிய

சிங் அரசாங்கம் வெளியுறவு அமைச்சர் இந்தர் குஜ்ராலின் கொழும்பு விஜயத்தை ரத்துச் செய்ததாம் எனவும் தெரிவித்துள்ளது. கொழும்பும், கன்பராவும் இந்தியாவை ''இருட்டில் வைத்திருந்தன'' என்று சாடும் அந்தப் பத்திரிகை, கடிதங்களின் சாராம்சம் புதுடில்லிக்குத் தெரியும் என்று செய்தி வெளியிட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் வாழும் ஈழத்தமிழரின் செல்வாக்கும் அவுஸ்திரேலியா இலங்கைவிவகாரத்தில் தலையிடுவதற்கான காரணங்களில் ஒன்று என்றும் அந்தப் பத்திரிகை மேலும் கருத்துத் தெரிவித்துள்ளது.

சந்திரசேகர்

நடமாட்டம் புதியதொரு விடயம் அல்லவென்றும், அது தொடர்பாக முழுமையாக ஆராயப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் சந்திரசேகர் பண்பட்ட அரசியல்வாதி என்றும், தமிழகப் பிரச்சினையை அவரால் விளங்கிக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்த கருணாநிதி, தமிழக அரசாங்கம் கலைப்பு பற்றி எதுவும் பேசப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

புலிகள்

மாமடு என்ற இடத்தில் இருந்து இளமருதம்குளம் ஊடாக முன்னேறிய படையினர் ஆறுமுகத்தான் புதுக்குளத்தில் நிலைகொண்ட போது அன்று மாலையே விடுதலைப்புலிகள் படையினரை சுற்றிவளைத்து கடும் தாக்குதலைத் தொடுத்தனர். மாலை மூன்றுமணிமுதல் இரவு ஏழு மணிவரை தொடர்ந்து நடைபெற்ற தாக்குதலினால் நிலைகுலைந்த இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கி முகாமுக்குச் சென்றனர். (க)

காணாமற்போன...

இவர்களுடன் சென்ற ஒரு படகே கடந்த சனிக்கிழமை இப்பகுதியில் கடற்படையின் தாக்குதலுக்கு இலக்காகியதும் அதில் இருவர் மரணமானதும் தெரிந்ததே.

காணாமல் போன படகையும், மீனவர்களையும் மீட்டுத் தரும்படி செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

ஓமந்தையில்

லும் பங்குபற்றினார். மாங்குளத்தில் இந்த மகளைச் சந்தித்துவிட்டு வரும் வழியிலேயே ஆயுதம் தாங்கிய சிப்பாயினால் இவர் வழி மறிக்கப்பட்டு மோதல் இடம்பெற்றது. வீரத்துடன் போராடி மரணமடைந்த இவரது பூதவுடலை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகளை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி பானு மேற்கொண்டிருந்தார்;

மருத்துவபீடத்திற்கு

சங்களுக்குச் சமமான பல்கலைக்கழகக் கல்லூரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்பட உள்ளதாகக் கூறினார் இக்கல்லூரிகளை நிறுவுவதற்கு 24 கோடி 30 இலட்சம் ரூபா தேவைப்படும் என்றும் இந்தப்பணம்அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டதும் இந்தக் கல்லூரிகள் அடுத்த ஆண்டு செயற்படத் தொடங்கும் என்றும் இந்தக்கல்லூரிகளில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்துறைக் கல்விக்குக் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

காசோலை

ஒன்றின் பெறுமதி 1 ரூபா 50 சதமாகவே இருந்து வருகிறது. காசோலை எழுதும் தாள்களுக்குரிய பணம் வங்கிகளின் பாவனையாளர்களினாலேயே செலுத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.